# அவனிடத்தில் அந்த பரிபூரண விசுவாசம் இருந்திருந்தால்





வில்லியம் மரியன் பிரன்ஹாம்

104. **நீ எந்த வைத்தியனையும் கேள். முதலாவது அவன் உன்னைச் செய்ய சொல்ல முயற்சிப்பது என்னவென்றால், அவன் உனக்குக் கொடுக்கிற மருந்திலே உனக்கு நம்பிக்கையை ஊட்டுவதே, உனக்கு அதிலே ஒரு நம்பிக்கையில்லாவிட்டால், அந்த மருந்தை எடுக்காமல் விட்டுவிடு.** பார் நிச்சயம்! பின்பு அது என்ன? **விசுவாசமே சுகத்தைத் தருகிறது. எல்லாக் காலத்திலேயும் விசுவாசமே சுகத்தை அளிக்கிறது.**

105. **பேதுருவும், அவன் பயப்படும் வரைக்கும் எல்லாவற்றையும் சரியாகச் செய்தான்.** வார்த்தையானது பேதுருவினிடத்தில், தண்ணீரின் மேல் நடக்கலாம் என்று கூறினது. முதலாவது அவன் பயந்தான். அவன் அதை ஒரு ஆவேசம் (Ghost) என்று நினைத்து, "ஆண்டவரே! அது நீராக இருப்பீரானால் உம்மிடத்திலேயே தண்ணீரின் மேல் நடந்து வரக் கட்டளையிடும்" என்றான்.

106. இயேசு "நடந்து வா" என்றார். அதுவே தான் யாக்கோபு 5:14 அதுவே மாற்கு 16, அதே

கர்த்தர்தான் இதைச் சொன்னார், “நடந்து வா” என்றார். ஆகவே அவன் நடக்க ஆரம்பித்தான். அன் சரியாகவே செய்தான், படகை விட்டு வெளியே வந்து நடக்க ஆரம்பித்தான்.

107. நீங்கள் அறிந்தபடி, கடலிலே ஒரு புயல் உண்டாயிற்று - பெரிய வெண்தொப்பி போன்ற அலைகள் இங்கே உள்ள சிறு குன்றுகளை விட பெரிய அலைகள் - நுரையானது அவைகள் மேலே பொங்கி வழிந்ததைப் போல - பயங்கரமான 15 அல்லது 20 அடி நுரை அந்த வெண்ணிறத் தொப்பி போன்றவைகள் உடைத்துக் கொண்டு வர - இந்த சூழ்நிலையில் “ஆண்டவரே! நீராக இருக்குமானால்...” என்று கேட்பது ஒரு வினோதமான காரியமாக இருந்தது. அவர் நிழலைப் போல... ஒரு ஆவியைப் போல காணப்பட்டார். அவன் “நீராக இருக்குமானால் உம்மிடத்தில் தண்ணீரின் மேல் வரக் கட்டளையிடும்” என்றான்.

108. இயேசு சொன்னார் - “சரி, வா!” என்றார்.

109. அவன் கீழே இறங்கினவனாக, “இது கர்த்தரே, நான் நடந்து செல்வேன்” என்றான். **ஆனால் தன் கண்களை அலைகள் மீது வைத்தபோது அவன் பயந்தான்.** அவன்

மனதிலே என்ன வந்தது? முதலாவதாக, அவன். நான் நடக்கப் போகிறேன், ஏனென்றால் வார்த்தையானது என்னை நடக்கச் சொல்லிற்று என்றான். அடுத்தப்படியாக - அவன் தன்னுடையதை நோக்கிப் பார்க்க ஆரம்பித்தான். **நல்லது தன்னுடைய நோயின் அறிகுறிகளைப் பார்க்கலானான். அவன் அங்கே நோக்கி, அலைகள் எவ்வளவு பெரிது என்று பார்க்க ஆரம்பித்து, பயந்து போனான். அவன் அதைச் செய்தபோது, கீழே போக ஆரம்பித்தான்.** பார்! **அவன் பயந்தது நடந்தேறியது! அவன் நடக்க முடியும் என்று விசுவாசித்தானோ அதுவும் நடந்தது. அவன் நடக்க முடியும் என்று விசுவாசித்த போது, தன்னுடைய விசுவாசத்தின் மீது பயப்படவே, அவனுடைய பொருள் அவனைவிட்டு விலகிற்று** - அவனிடத்தில் இல்லை. பார் அதை? இன்னும் தன் விசுவாசத்தை பெயரளவில் கொண்டவனாக இருந்தான். பாருங்கள். **அவனிடத்தில் அந்த பரிபூரண விசுவாசம் இருந்திருந்தால் அந்தப் பொருள் அந்த வெண் தொப்பிகளுக்கு *(White Caps)* மேலாக சென்று அவரை**

**அடைந்திருக்கும்.** பாருங்கள், ஆனால் அவன் அதைப் பெற்றிருக்கவில்லை. அது அவனிடத்திலுள்ளதாக மட்டும் அவன் நினைத்திருந்தான். "ஏன், இதைச் செய்யும்படி தேவன் கூறியுள்ளார், இது நிச்சயம் சம்பவிக்க வேண்டும்" ஆகவே நான் இவ்விதம் செய்வேன் என்று முதன்முறையாக செய்தான்; படகிலிருந்து இறங்கி நடக்க ஆரம்பித்தான். அந்த அலைகள் எவ்வளவு தான் முரண்பாடாய் தோன்றினாலும் அவன் அவைகளைக் குறித்து கவலைப்படவில்லை. அவன் சிந்தையில் அது வரவும் இல்லை.

110. இப்பொழுது, நீ இந்த விதமாக யோசித்து, "நல்லது, கொஞ்சம் பொறு, நான் எத்தனையோ ஆண்டுகள் சுகமில்லாமலிருந்திருக்கிறேன்" என்பாயானால், நிறுத்து! நீ அந்தப் படகுக்கே திரும்பி விடலாம். பார்? பார்? **நீ அந்தச் சிந்தனையை உன்னிலிருந்து அகற்றும் போது...**

*செய்தி:* 63-08-25E *பரிபூரண விசுவாசம்*

★★★★★












HENRY COLLER



